தொகுதி- ௫௬ Vol. 56

பகுதி- ௭ No. 7

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1991

சார்வரி — ஐப்பசி

OCTOBER-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. அங்கதச் செய்யுள் — — 193
திரு. மது. ச. விமலாநந்தம் எம். ஏ.
2. இளம்பூரணர் எழுத்துரை — 201
ஆ. சிவலிங்கனார்
3. உறுதி ஏற்போம். — 112
கி. பழநியப்பன்
4. வினையெச்சங்களில் காலம். — 213
மா. இளையபெருமாள் எம். ஏ. எம். லிட்.,
5. மாணவர் பகுதி — 218
6. பறவையே பாராயோ ? — 221
நாவரசன்
7. மதிப்புரை — 222
8. காலத்தை வென்ற கன்னி — — 223
வித்துவான் இல. வாசுகி நாதன்

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1: நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்தகலாநிதி, பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D
சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து, M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர். மதுரை.
6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர்.
மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர். மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர்.
தமிழ்விரிவுரையாளர். செந்தமிழ்க்கல்லூரி. மதுரை.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருசு Vol. 56	திருவள்ளுவர் ஆண்டு 1991 சார்வரி—ஐப்பசி 1960 — October	பகுதி. எ No. 7

செய்யுள் வகை 1.

அங்கதச் செய்யுள்

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள். எம். ஏ.
தமிழ் விரிவுரையாளர்
சரபோஜி அரசர் கல்லூரி. தஞ்சாவூர்

எழுவாய்:

செய்யுள் வகைகளுள்ளே அங்கதச்செய்யுளும்ஒன்ருகும். இதனை, 'வசைப்பாட்டு' எனவும், 'வசைக்கவிதை' எனவும் வழங்குவர். ஆங்கிலத்தில் satire என்பதே தமிழில்அங்கதம் எனமொழியப்பெறும். மேலைநாட்டு இலக்கியங்களில் இவ் வசைச் செய்யுட்கள் பெருவாரியாக இலங்குதல் போல, நம் தமிழ் இலக்கியங்களில் அவ்வளவாகஇல்லையே என இன்றும் கேட்கப்படுகின்றது. இத்தகைய செய்யுட்கள் நந்தமிழ் இலக்கியத்தில் நிறைய உண்டென உணர்த்துவதே இக் கட்டுரையின் கருத்தாம்.

அங்கதம் என்ருல் என்ன?

தனி ஒருவனுடைய குறையையோ, அன்றி ஒரு சமுதாயத்தின் குறையையோ அன்னார் நெஞ்சில் உறுத்தும் வண்ணம் வெளிப்படையாகவோ அல்லது குறிப்பாகவோ நகைச்

சுவைதோன்றக்கூறப்பெறும் சுடுசொல்லே அங்கதம்என்க.[1] அவ்வசைதாமும் கூறப்படுங்கால்நகைதோன்றுமலோ. இலக்கிய வடிவு இல்லாமலோ இருப்பின் அஃது ஏற்றமுடையதாகாது.[2]

வசை பிறந்த வரலாறு:

மக்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் கடப்பாடுளது. அங்ஙனம் கருத்துணர்த்தும் கருவியாக அமைந்ததே மொழி. ஆயினும் அறிவு வளர வளர—விரிவடைய விரிவடைய எண்ணங்களை எடுத்தியம்புமுறைகளும் பல்கின—பலவாயின. தெள்ளிதில் பொருள் விளங்குமாறு நேர்முகமாகவும், முயன்று பொருள் கொள்ளுமாறு சுற்றிவளைத்து மறைமுகமாகவும், புகழ்வதுபோல இகழ்வதும், இகழ்வதுபோல் புகழ்வதுமாகிய நிலைகள் நாளும் வளரலாயின. இவ்வண்ணம் எண்ணத்தை எடுத்தியம்பும் ஒரு வாயிலாக அமைந்ததே இவ்வசையும் எனலாம்.

நோக்கம்:

வசைக்கு உரியார் தம்குறையுணர்ந்து அதனைப் போக்கித் திருந்த வேண்டும் என்பதும், மாந்தர்தம் தவறுகள் எள்ளி நகையாடப்பட வேண்டும் என்பதும் ஆகிய இரண்டுமே இவ் அங்கதத்தின் இரட்டைநோக்கங்களாகும்.[3]

---

1. Satire, in its literary aspect, may be defined as the expression, in adequate terms, of the sense of amusement or digust excited by the ridiculous or unseemly, provided that humour is a distinctly recognizable element and that the utterance is invested with literary form-Encyclopaedia Britanica
2. Without humour, Satire is invective; without literary form it is mere Clownish jeering—Ibid.
3. The two main purposes of Satire are: to brand and castigate human Viciousness, and to laugh at human folly—Ibid.

சங்க காலத்திற்கு முன்பே.........!

இவ் வசை பாடும் வழக்கம் சங்க காலத்திற்கு முன்ன மேயே அமைந்திருக்கக் காண்கிறோம். ஒல்காப் புகழ் தொல் காப்பியத்திலும் இவ்வங்கதம் பற்றிய இலக்கணமும், வகை யும் கூறப்பட்டுள்ளன. இலக்கியம் கண்டதற்கன்றோ இலக் கணம்; இவ்வகை அங்கதம் பயின்ற இலக்கியம் பல இருந்தமையாலன்றோ, 'எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போலத்தோலாப் புகழ் தொல்காப்பியரும் இதற்கு இலக் கணம் வகுத்துள்ளார். எனவே தொல்காப்பியம் தோன்று வதற்கு முன்னரே இவ்வகை வசைக்கவிதை வழக்கில் நிரம்ப இருந்தன என்பது இனிது போதரும்.

வகையும் வடிவும்:

அங்கதம் 'செம்பொருள் அங்கதம்' 'பழிகரப்பு அங்க தம்,என இருவகைப்படும். இதனைப் பின்வரும் தொல்காப்பி யச் சூத்திரத்தால் அறிக:

வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர் (தொல்–செய்–129)

அங்கதம் தானே அரில்தபத் தெரியிற்
செம்பொருள், கரந்தது எனஇரு வகைத்தே—
(தொல்—செய்—124)

எடுத்த எடுப்பிலேயே பொருள் தோன்ற அமைவது **செம்பொருள் அங்கதம்;** வாய் காவாது சொல்லப்பட்ட வசையே செம்பொருள் அங்கதம் என்பார் பேராசிரியரும். இதனையே தொல்காப்பியச் சூத்திரம் 'செம்பொருளாயின் வசையெனப்படுமே' (செய்யுளியல்—125) எனக் கூறும். வெளிப்படையாகப் பொருள் தோன்றாது மறைத்துக்குறிப் பாற் கூறுவது **பழிகரப்பு அங்கதம்.** இதனையுணர்த்தும் ''மொழிகரந்து சொல்லின் பழிகரப்பாகும்'' என்ற தொல் காப்பிய விதிக்கு, 'வசைப்பொருளைச் செம்பொருள் படாமல்

இசைப்பது பழிகரப்பு அங்கதம்; மாற்றரசனையும் அவனிளங்கோவினையும் வசை கூறுமாறு போலாது, தங் கோனையும் அவனிளங்கோனையும் வசை கூறுங்கால் தாங்கி யுரைப்பர்—அவைபோலப்பழிப்பன' என்றும் பேராசிரியர் உரை செய்வதும் உய்த்துணரற்பாற்று. இதனுல் அங்கதம் இருவகைத்து என்பதறிந்தோம்.

அங்கதச் செய்யுள் பயின்றுவரும் பாவடி பலவாகும். வசைக் கவிதை வெண்பாவில் வருவதே சிறப்புடைத்து. இது காப்பியரின் கருத்து.

நெடுவெண் பாட்டே, குறுவெண் பாட்டே
கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுளோடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின.
(செய்யுளியல்—118)

எனினும் சிற்சிலபோது அகவல் ,கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய யாப்பில் அங்கதம் அமைவதும் எண்டு.

காட்டுகள் சில காண்பாம்:

இனி, இவ்விருவகை அங்கதச் செய்யுட்களுக்கும் ஏற்ற எடுத்துக்காட்டுகள் சில காண்பாம். முதற்கண் செம் பொருள் அங்கதத்தை அறிவாம்: இது பெரும்பான்மை நீதி நூல்களிலும், தனிப்பாடல்களிலும் பயிலப்பட்டு வருதல் கண்கூடு.

செம்பொருள் அங்கதம்

நீதி நூல்களில்.........

சேவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்? (குறள் 420)

எனும் செந்நாப்போதாரின் திருக்குறள் இவ்வகைத்து. செவி யால் உணரப்படும் சொற்சுவை பொருட்சுவைகளை யுண ராது, வாயால் நுகரப்படும் உணவின் சுவையிலேயே ஈடு

படும் மனிதர் இறப்பதால் வரும் இழப்பும், இருப்பதால் வரும் ஏற்றமும் ஏதுமின்மையால், உலகிற்கு அவரால் விளைவதுயாது? ஏதுமில்லை! எனப்பொருள்படும் இக்குறள் வெண்பாவில் வசைவெளிப்படையாக அமைந்த திறமும் அழகும் தேர்ந்து தெளிக.

தனிப்பாடல்களில்.........

அடுத்து, தனிப்பாடல் சில காண்பாம். பிற்காலப்புலவராம் காளமேகம் வசைபடுவதில் வல்லவர். 'வசை பாடக் காளமேகம், எனப்பாராட்டப்பெறுபவர். அவர் பாடிய பாடல்கள் அனைத்தும்தனிப்பாடல்களே. பெரும்பாலும் இப் பாடல்களின் கருத்துக்கள் இடக்கரடக்கலாவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒருகால் திருநன்நாகையில் காளமேகப்புலவர் வதிந்தபோது விலைமகள் ஒருத்தி உரக்க இசை பாடினளாக, அவளது குரல் கேட்கக்கர்ணகடூரமாக இருக்கவே அப்பாட்டைக்கேட்ட கவிகாளமேகம்,

வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்—
பாழ்த்தக் குரலெடுத்துப் பாடினள்—நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணான்கண் டேன்கண்டேன் என்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார்—

என்று, பாடினவள் குரல் கழுதையின் குரலையும் விஞ்சி விட்ட திறத்தை வெண்பாவில் வடித்தெடுத்தார்.

அதுபோன்றே நாகை காத்தான் சத்திரத்தில் வேளா வேளைக்குச் சோறு போடாதது கண்ட கவி காளமேகம் நகை தோன்ற பாடிய பாடல் அறிந்து இன்புறத்தக்கது.

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்,
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும், ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்.

ஒரு சமயம் குடந்தையில் காளமேகப்புலவர் ஒரு வரிசையில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். எதிர் வரிசையில் அவருக்கு நேராக முன்குடுமி வைத்த ஓர் அந்தணனும் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்; அவனது குடுமி அவிழ்வதையும் கவனியாது சாப்பிடுவதிலே ஈடுபட்டிருந்தான் அந்தணன். அவனது தலைமயிர் குனிந்து சாப்பிடும்போது இலையில் விழுந்து, பின் நிமிரும்போது எதிரே சாப்பிட்டுக்கொண்டிருந்த காளமேகப்புலவரின் இலையில் எச்சிற் பருக்கையைச் சிதறச்செய்தது. இதனைக்கண்டு சினங்கொண்ட

சோருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா! சோற்றுப்
பொருக்கெழுந்த வாயா! புலையா!—திருக்குடந்தைக்
கோட்டானே! நாயே! குரங்கே! யுனையொருத்திப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

எனக் கவிபாடினர்.

மற்றொரு சமயம் நாகைக்குப் புறப்பட்டபோது, ஆயக்காரன் ஒருவன் சண்டிக்குதிரை ஒன்றை வண்டியில் பூட்டி ஊர்ந்து செல்வானாயினன். அவ்வண்டிக்கு முற்போந்து குதிரையைப் பற்றிச்சிலர் இழுப்பவும், பின்னேசிலர் வண்டியை உந்தித்தள்ளவும் அப்பரி பரிதபித்தமை கண்ட கவி அக் குதிரையை இகழ்ந்து,

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி.

என வசைக்கவி இசைத்தார்.

பிறிதொரு சமயம் காளமேகம் திருமலைராயனைக் காண்பதற்கு அவன் அரசவை நோக்கிச்சென்றார். அவண் வீற்றிருந்த புலவர் அனைவரும் இவரைப் பொருட்படுத்தாமல்—இடங்கொடாது புறக்கணித்தனர். பின்னர் இடம் பெற்று

அமர்ந்த ஆசுகவி, அப்புலவர்களை நோக்கி 'நீவிர் யாவர்?' எனவினவ, அதற்கு அவர்கள் 'நாங்கள் கவிராயர்கள்' எனச் செருக்கோடு செப்பினர். அதுகேட்ட கவி காளமேகம் வேறொரு குறிப்பை உட்கொண்டு நகைத்து,

வாலெங்கே? நீண்ட வயிறெங்கே? முன்னிரண்டு
காலெங்கே? உட்குழிந்த கண்ணெங்கே?—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்.

எனப் பாடி இகழ்ந்தார். இன்னும் 'வாதக்காலாம் தமக்கு... என்பன போன்ற இனிய வெண்பாக்களும் இன்சுவை மிக்கன, இடம்பற்றி இதனோடு இதனை நிறுத்துவாம். இது காறும் கண்ட தனிப்பாடல்களில் பொருள் வெளிப்படையாக (Explicit) இருத்தல் காண்க,

தமிழ் நாவலர்சரிதையில் ஒரு பாடல்: எழிற்கோ என்ற அரசனை அவ்வையார் பாடியது, அப்பாட்டு வருமாறு:

இருள்தீர் மணிவிளக்கத் தேழிலீர் கோவே!
குருடேயு மன்றுநின் குற்றம், மருள்தீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனவிரண்டு
ஓட்டைச் செவியு முள.

'நீ குருடு மட்டுமன்று; கேள்வியுணர்வில்லா ஓட்டைச் செவிகளையும் பெற்றுள்ளாய்,' என்ற பொருள் இங்கே வெளிப்படையாக விளங்குகின்றதன்றோ!

காப்பியங்களிலே.........

இனி, காப்பியங்களில் காணப்பெறும் வசைக்கவிதை சில காண்போம். காவியங்களிலும் சில பாத்திரங்களின் வாயிலாக இடத்திற்கேற்ப வசையும் நகையும் வழங்கப்படுவதுண்டு. இங்கே வசை வெளிப்படையாக அமையுமாயினும் கவிநயம் விளங்குவது கண்கூடு.

கம்பன் காட்டுமாறு........

கம்பன் காட்டிய கலைக்கோயிலில்—(அங்கதன் தூதுப் படலம்) செம்பொருட் செய்யுட்கள் சில சிறந்து விளங்குகின்றன. இராவணன் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கின்றான்; அவண்போந்த தூதன்–அங்கதனை இலங்கையர் கோன் யாரென வினவுகின்றான். அவ்வினாவிற்கு அங்கதன் விடை தருகின்றான் பாருங்கள்:

இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்கின்றானைச்
சுந்தரத் தோள்க ளோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன், தேவருண்ண
மந்திர கிரியால் வேலைக் கலக்கினான் மைந்தன்என்றான்.

இச்செய்யுளின் பொருள் தெள்ளத் தெளிய உள்ளது; செம்பொருள் அங்கதனும் செம்மையாய் அமைந்துளது.

இதுகேட்ட தென்னிலங்கை வேந்தன், வாலி தனக்கு நண்பன், எனவே அவன் மகன் அங்கதன் தனக்கும் மகன் முறையாகின்றான்; அத்தகையானைத் தன் கையால் மன்னனாக முடிசூட்டுவதாயும் கூறுகின்றான். சாற்றியவுரை கேட்டுச்சீற்றங் கொண்ட அங்கதன்,

வாய்தரத் தக்கசோல்லி என்னையுன் வசஞ்சேய் வாயேல்
ஆய்தரக் தக்க தன்றோ? தூதுவந் தரச தாள்கை
நீதரக் கோள்வேன் யானே யதற்கினி நிகர்வே ரேண்ணின்
நாய் தரக் கோள்ளும் சீயம் நல்லர சென்று நக்கான்

இங்கேயும் பொருள் வெளிப்படை. கம்பன் கவியமுதத்தில் இவைபோன்ற இடங்கள் பல. கம்பன் கவிபாடிக் கன்னித் தமிழ் வளக்கும் எவரும் இதனை இனிதுணர்வர்.

(தொடரும்)

இளம்பூரணர் எழுத்துரை

[ஆ. சிவலிங்கனுர், மயிலம்.]

7. திரிந்ததன் திரிபு

"ஆசிரியர் தொல்காப்பியர் எழுத்தினை எட்டுவகையானும் எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினுர்" எனக் கூறி, அவ்வகைகள் இன்னின்ன என்றும் எழுதினுர் உரையாசிரியர், அவ்வெட்டிறந்த பலவகையில் திரிந்ததன் திரிபு அது எவன்றலும், திரிந்ததன் திரிபு பிறிது என்றலும், திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் என்றலும் ஆகிய மூன்று வகைகளையும் கூறினுர். மூன்றனுள் முன்னிரண்டு வகைகளை மூன்றிடங்களில் சுட்டிச்சென்ருர் அவர். இம் மூன்றன் இலக்கணம்பற்றிச் சங்கத்துச்சாமி எனச்சிறப்பிக் கப்படும் திரு. பண்டித. சித. நாராயணசாமியார் அவர்கள் செந்தமிழ்த்தொகுதி 52 பகுதி 7.ல் விளக்கமாக எழுதியுள்ளார்கள். அவர்கள் கருத்துவழிநின்று இளம்பூரணர் எழுதிய இடங்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

'திரிந்ததன் திரிபு அது வென்றல், என்பது, விகாரப்பட்டதின் விகாரத்தை விகார எழுத்தாகக்கொள்ளாமல் மூல எழுத்தாகக்கொள்ளுதல்-உதாரணமாகக் 'கஃறீது' என்ற இருசொற்புணர்ச்சியைக் கொள்ளலாம். இது கல்-தீது எனப்பிரிக்கப்படும். நிலைமொழி யீற்றிலுள்ள லகர ஒற்றைக் கண்ட வருமொழி முன்னுள்ள தகரவொற்று, றகர ஒற்ருக மாறும் என்பது விதி. லகர தகர ஒற்றுக்கள் இடைநிலை மயக்கம் பெரு. ஆய்தமும் தகர ஒற்றும் மயக்கம் பெறும். 'அஃது' என்பதில் மயங்கியது காண்க. 'கஃறீது' என்பதில் நிலைமொழியீற்று லகரம் ஆய்தமாகத்திரிந்தது; வருமொழி

முதல்தகரம் றகரமாகத்திரிந்தது. தகரம் றகரமாகத்திரிய வேண்டியதில்லை. என்றாலும் நிலைமொழி லகரத்திரிபாகிய ஆய்தத்தை, வருமொழித்தகரமானது, ஆய்தமாகவே கருதாது, அதன் முன்னைய வடிவமாகிய 'லகர' எழுத்தாகவே கருதியதாம். சொற்புணர்ச்சியிடத்துமட்டுமன்றி ஆசிரியர் ஆட்சியிலும் இதனைக்காணலாம்.

(1) மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத் தவையவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும். (232)

'மா(மரம்), ஆ,மா ஆகிய மூன்று பெயர்ச்சொற்களும், வேற்றுமைவழியில் வருமொழிவல்லெழுத்தோடு புணருமிடத்து மேல்நூற்பாவில்(230)கூறப்பட்ட யா, பிடா, தளா ஆகிய மூன்று பெயர்ச்சொற்களோடு ஒருதன்மைவாய் வல்லெழுத்துப்பெறாது மெல்லெழுத்துப்பெற்று முடிதலுடையன. அவற்றுள் ஆவும் மாவும் ஆகிய இரண்டும் அகரஎழுத்தும் வல்லெழுத்தும் நிலைபெறாவாய் னகர ஒற்றுப்பெற்று முடியும்'' என்பது இதன் உரை.

உதாரணம் மாஅங்கோடு, ஆன்கோடு, மான்கோடு என்பனவாம். இந்நூற்பாவின் உரைக்கீழ் உரையாசிரியர்,

> "அவற்றோ ரன்ன என்ற மாட்டேற்றால் பெற்று நின்றது மெல்லெழுத்தாகலின் 'அகரம் வல்லெழுத்தவையவண் நிலையா' என்றோதற்பால தன்றேனின், மேல்' 'ஊவேன் ஒரு பெயர் ஆவொடுசிவணும்'' (உயிர்மயங்கியல்,67) என்றவழி அம்மாட்டேற்றானே அதன் வல்லெழுத்து வீழ்வும் கோளல் வேண்டித் திரிந்ததன் திரிபது என்னும் நயத்தானே மெல்லெழுத்தை வல்லெழுத்தாக வோதினான் என்க"

என்றெழுதினர். மா, ஆ, மா ஆகிய மூன்று பெயர்களும் யாமுதலிய மூன்று பெயர்களோடு மாட்டேற்றப்பட்டன.

யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே (130)

என, யாமுதலிய மூன்றும் வருமொழி வல்லெழுத்தோடு புணருமிடத்து (வேற்றுமையில்) மெல்லெழுத்துமிக்கு முடியும் என்றார் ஆசிரியர். எனவே முன்மாட்டேற்றால் மாமுதலிய மூன்று பெயர்களும் அவ்வாறு மெல்லெழுத்து மிகும் என்பதாயிற்று. அடுத்து, 'மாமரக்கிளவி தவிர ஆவும் மாவுமாகிய இரண்டு பெயர்களும் "குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும் அறியத்தோன்றும் அகரக்கிளவி" என்றநூற்பாவின் விதிப்படி பெற்று நின்ற அகரஎழுத்தும், வருமொழிவல்லெழுத்து மிகுதலும் இன்றி னகர ஒற்றுப்பெறும்' என்றது, மாட்டேற்றுக்கு மாறுபடுகின்றது. மாட்டேற்றின்படி "அகரம் மெல்லெழுத்து அவை அவண் நிலையா" என்றே கூறியிருக்கவேண்டும். அவ்வாறு கூறாமைக்குக்காரணம், ஊகாரவிறுதிபற்றிப் பின்னர் கூறும் போது "ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்" எனமாட்டேற்றவேண்டியிருப்பதாம். 'ஊ'என்ற பெயர் 'குறை'யென்ற சொல்லுடன் புணரும்போது, னகர எழுத்துப் பெற்று 'ஊன்குறை' எனவரும். ஊகாரவிறுதிவேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும் என்பது விதி (267). அன்றியும் தனி 'ஊ' ஆதலின் உகர எழுத்தும் பெற்றுவரும் என்பதும் ஒரு விதி உண்டு. அவற்றின்படி வரும் உகரமும் வல்லெழுத்தும் னகர ஒற்று வரும் போது நிலைத்தல் இல்லை. அதற்குவிதி கூறுவதாயின் நூற்பா ஒன்று மிகுதிப்படும். அதைக்குறைக்க வேண்டி மாட்டேற்றால் கூறினார். "அகரம் மெல்லெழுத்தவையவண் நிலையா" என்று கூறியிருந்தால் பின்னர் "ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்" என மாட்டேற்ற முடியாது, 'ஊ'என்பது மெல்லெழுத்துமிகும் என்பது இல்லையாதலின். மாட்

டேற்றுக் கேற்பவே "அகரம் வல்லெழுத்தவையவண் நிலையா" என்றார்.

ஆயின் 'ஊ' என்பதை மாட்டேற்றுவதற்காக மாறுபடக் கூறுதல் பொருந்துமோ எனின், திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தாற் கூறுதலின் பொருந்தும் என்னலாம். மாமரக்கிளவி முதலிய மூன்றும் மெல்லெழுத்துப் பெற்றாலும் ஆகாரவீற்றுப் பொதுச்சூத்திர விதிப்படி வேற்றுமையில் வல்லெழுத்துப்பெறுவன. அதனாலேயே "யாமரக்கிளவியும்" என்பதையடுத்து 'வல்லெழுத்து மிகினும் மானமில்லை" (231) என்றார் ஆசிரியர். எனவே தொல்காப்பியர் யாமுதலியவற்றிற்கு வல்லெழுத்து மிகுதல் இயல்பு என்றும் மெல்லெழுத்து மிகுதல் திரிபு என்றும் கொண்டார். மெல்லெழுத்து மிகுதலாகியதிரிபு, பொதுச்சூத்திர விதிப்படி வல்லெழுத்து மிகுதலாகிய இயல்பில் திரிந்ததாம். ஆதலின் அத்திரிபை வேறுபட்ட தனித்திரிபாகக் கருதாமல் முன்னைய வல்லெழுத்து மிகுதலாகவே கருதினர். அதனால் தான் 'வல்லெழுத்து அவண் நிலையாது' என்றார். இது, திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தாற் கூறியதாம். 'ஊ' என்ற பெயரை மாட்டேற்றுவதற்குத் துணை செய்தலின் இந்நயத்தை மேற்கொண்டார் ஆசிரியர். இதில் திரிந்தது யாதெனின் வல்லெழுத்துமிகுதி. அதன் திரிபாவது மெல்லெழுத்து மிகுதல். அது என்றலாவது மெல்லெழுத்தாகிய மிகுதியைப்பழைய வல்லெழுத்து மிகுதியாகவே கருதுதல்.

(2) ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறு மெய்யொழியக் கெடுதல்வேண்டும். (469)

"எண்ணுப் பெயராகிய 'ஆறு' என்பது திரிந்த 'அறு' என்ற சொல்லில் உள்ள குற்றியலுகரம் ஆயிரம் என்ற சொல்லுடன் சேரும்போது தான் ஏறிய மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாதுநிற்ப உகரமாகிய அவ்வீறு கெட்டு முடிதல் வேண்டும்." என்பது இதன் உரை. உதாரணம் 'அறுயிரம்' என்பது.

இளம்பூரணர் எழுத்துரை

[ஆ. சிவலிங்கனுர், மயிலம்.]

7. திரிந்ததன் திரிபு

"ஆசிரியர் தொல்காப்பியர் எழுத்தினை எட்டுவகையானும் எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினுர்" எனக் கூறி, அவ்வகைகள் இன்னின்ன என்றும் எழுதினுர் உரையாசிரியர், அவ்வெட்டிறந்த பலவகையில் திரிந்ததன் திரிபு அது எவன்றலும், திரிந்ததன் திரிபு பிறிது என்றலும், திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் என்றலும் ஆகிய மூன்று வகைகளையும் கூறினுர். மூன்றனுள் முன்னிரண்டு வகைகளை மூன்றிடங்களில் சுட்டிச்சென்ருர் அவர். இம்மூன்றன் இலக்கணம்பற்றிச் சங்கத்துச்சாமி எனச்சிறப்பிக்கப்படும் திரு. பண்டித. சித. நாராயணசாமியார் அவர்கள் செந்தமிழ்த்தொகுதி 52 பகுதி 7.ல் விளக்கமாக எழுதியுள்ளார்கள். அவர்கள் கருத்துவழிநின்று இளம்பூரணர் எழுதிய இடங்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

'திரிந்ததன் திரிபு அது வென்றல், என்பது, விகாரப்பட்டதின் விகாரத்தை விகார எழுத்தாகக்கொள்ளாமல் மூல எழுத்தாகக்கொள்ளுதல்-உதாரணமாகக் 'கஃறீது' என்ற இருசொற்புணர்ச்சியைக் கொள்ளலாம். இது கல்-தீது எனப்பிரிக்கப்படும். நிலைமொழி யீற்றிலுள்ள லகர ஒற்றைக் கண்ட வருமொழி முன்னுள்ள தகரவொற்று, றகர ஒற்ருக மாறும் என்பது விதி. லகர தகர ஒற்றுக்கள் இடைநிலை மயக்கம் பெரு. ஆய்தமும் தகர ஒற்றும் மயக்கம் பெறும். 'அஃது' என்பதில் மயங்கியது காண்க. 'கஃறீது' என்பதில் நிலைமொழியீற்று லகரம் ஆய்தமாகத்திரிந்தது; வருமொழி

முதல்தகரம் நகரமாகத்திரிந்தது. தகரம் நகரமாகத்திரிய வேண்டியதில்லை. என்றாலும் நிலைமொழி லகரத்திரிபாகிய ஆய்தத்தை, வருமொழித்தகரமானது, ஆய்தமாகவே கருதாது, அதன் முன்னைய வடிவமாகிய 'லகர' எழுத்தாகவே கருதியதாம். சொற்புணர்ச்சியிடத்துமட்டுமன்றி ஆசிரியர் ஆட்சியிலும் இதனைக்காணலாம்.

(1) மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத் தவையவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும். (232)

'மா(மரம்), ஆ,மா ஆகிய மூன்று பெயர்ச்சொற்களும், வேற்றுமைவழியில் வருமொழிவல்லெழுத்தோடு புணருமிடத்து மேல்நூற்பாவில்(230)கூறப்பட்ட யா, பிடா, தளா ஆகிய மூன்று பெயர்ச்சொற்களோடு ஒருதன்மைவாய் வல்லெழுத்துப்பெறாது மெல்லெழுத்துப்பெற்று முடிதலுடையன. அவற்றுள் ஆவும் மாவும் ஆகிய இரண்டும் அகரஎழுத்தும் வல்லெழுத்தும் நிலைபெறுவாய் னகர ஒற்றுப்பெற்று முடியும்" என்பது இதன் உரை.

உதாரணம் மாஅங்கோடு, ஆன்கோடு, மான்கோடு என்பனவாம். இந்நூற்பாவின் உரைக்கீழ் உரையாசிரியர்,

"அவற்றோ ரன்ன என்ற மாட்டேற்றால் பெற்று நின்றது மெல்லெழுத்தாகலின் 'அகரம் வல்லெழுத்தவையவண் நிலையா' என்றேதற்பாலதன்றேனின், மேல்' 'ஊவென் ஒரு பெயர் ஆவொடுசிவணும்" (உயிர்மயங்கியல்,67) என்றவழி அம் மாட்டேற்றானே அதன் வல்லெழுத்து வீழ்வும் கொளல் வேண்டித் திரிந்ததன் திரிபது என்னும் நயத்தானே மெல்லெழுத்தை வல்லெழுத்தாக வோதினான் என்க"

என்றெழுதினர். மா, ஆ, மா ஆகிய மூன்று பெயர்களும் யாமுதலிய மூன்று பெயர்களோடு மாட்டேற்றப்பட்டன.

யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே (130)

என, யாமுதலிய மூன்றும் வருமொழி வல்லெழுத்தோடு புணருமிடத்து (வேற்றுமையில்) மெல்லெழுத்துமிக்கு முடியும் என்றார் ஆசிரியர். எனவே முன்மாட்டேற்றால் மாமுதலிய மூன்று பெயர்களும் அவ்வாறு மெல்லெழுத்து மிகும் என்பதாயிற்று. அடுத்து, 'மாமரக்கிளவி தவிர ஆவும் மாவுமாகிய இரண்டு பெயர்களும் '' குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும் அறியத்தோன்றும் அகரக்கிளவி'' என்றநூற்பாவின் விதிப்படி பெற்று நின்ற அகரஎழுத்தும் வருமொழிவல்லெழுத்து மிகுதலும் இன்றி னகர ஒற்றுப்பெறும்' என்றது, மாட்டேற்றுக்கு மாறுபடுகின்றது. மாட்டேற்றின்படி ''அகரம் மெல்லெழுத்து அவை அவண் நிலையா'' என்றே கூறியிருக்கவேண்டும். அவ்வாறு கூறுமைக்குக்காரணம், ஊகாரவிறுதிபற்றிப் பின்னர் கூறும்போது ''ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்'' எனமாட்டேற்றவேண்டியிருப்பதாம். 'ஊ'என்ற பெயர் 'குறை'யென்ற சொல்லுடன் புணரும்போது, னகர எழுத்துப் பெற்று 'ஊன்குறை' எனவரும். ஊகாரவிறுதிவேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும் என்பது விதி (267). அன்றியும் தனி 'ஊ' ஆதலின் உகர எழுத்தும் பெற்றுவரும் என்பதும் ஒரு விதி உண்டு. அவற்றின்படி வரும் உகரமும் வல்லெழுத்தும் னகர ஒற்று வரும்போது நிலைத்தல் இல்லை. அதற்குவிதி கூறுவதாயின் நூற்பா ஒன்று மிகுதிப்படும். அதைக்குறைக்க வேண்டி மாட்டேற்றால் கூறினர். ''அகரம் மெல்லெழுத்தவையவண் நிலையா'' என்று கூறியிருந்தால் பின்னர் ''ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்'' என மாட்டேற்ற முடியாது, 'ஊ'என்பது மெல்லெழுத்துமிகும் என்பது இல்லையாதலின். மாட்

டேற்றுக் கேற்பவே "அகரம் வல்லெழுத்தவையவண் நிலையா" என்றார்.

ஆயின் 'ஊ' என்பதை மாட்டேற்றுவதற்காக மாறுபடக் கூறுதல் பொருந்துமோ எனின், திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தாற் கூறுதலின் பொருந்தும் என்னலாம். மாமரக்கிளவி முதலிய மூன்றும் மெல்லெழுத்துப் பெற்றாலும் ஆகாரவீற்றுப் பொதுச்சூத்திர விதிப்படி வேற்றுமையில் வல்லெழுத்துப்பெறுவன. அதனாலேயே "யாமரக்கிளவியும்" என்பதையடுத்து 'வல்லெழுத்து மிகினும் மானமில்லை" (231) என்றார் ஆசிரியர். எனவே தொல்காப்பியர் யாமுதலியவற்றிற்கு வல்லெழுத்து மிகுதல் இயல்பு என்றும் மெல்லெழுத்து மிகுதல் திரிபு என்றும் கொண்டார். மெல்லெழுத்து மிகுதலாகியதிரிபு, பொதுச்சூத்திர விதிப்படி வல்லெழுத்து மிகுதலாகிய இயல்பில் திரிந்ததாம். ஆதலின் அத்திரிபை வேறுபட்ட தனித்திரிபாகக் கருதாமல் முன்னைய வல்லெழுத்து மிகுதலாகவே கருதினார். அதனால் தான் 'வல்லெழுத்து அவண் நிலையாது' என்றார். இது, திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தாற் கூறியதாம். 'ஊ' என்ற பெயரை மாட்டேற்றுவதற்குத் துணை செய்தலின் இந்நயத்தை மேற்கொண்டார் ஆசிரியர். இதில் திரிந்தது யாதெனின் வல்லெழுத்துமிகுதி. அதன் திரிபாவது மெல்லெழுத்து மிகுதல். அது என்றலாவது மெல்லெழுத்தாகிய மிகுதியைப்பழைய வல்லெழுத்து மிகுதியாகவே கருதுதல்.

(2) ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறு மெய்யொழியக் கெடுதல்வேண்டும். (469)

"எண்ணுப் பெயராகிய 'ஆறு' என்பது திரிந்த 'அறு' என்ற சொல்லில் உள்ள குற்றியலுகரம் ஆயிரம் என்ற சொல்லுடன் சேரும்போது தான் ஏறிய மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாதுநிற்ப உகரமாகிய அவ்வீறு கெட்டு முடிதல் வேண்டும்." என்பது இதன் உரை. உதாரணம் 'அறாயிரம்' என்பது.

உரையாசிரியர், இதன் உரைக்கீழ், "திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தால் 'ஆறன் மருங்கின்' என்று ஓதப்பட்டது" என எழுதியுள்ளார். இந்நூற்பாவின்படி நிலைமொழி 'அறு' என்பதாகும்; 'ஆறு' என்பதன்று. 'ஆறு' என்ற எண்ணின் முன் 'பஃது' என்ற எண் வரும்போது முன்னையது நெடு முதல் குறுகி 'அறுபஃது' எனவரும் என்பது. "மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்" என்ற நூற்பாவில் கூறப்பட்டது. அதற்குப் பின்னர் அளவுப்பெயர் முதலிய பெயர்கள் வரும்போது எவ்வெவ்வாறு புணரும் என்று கூறிவந்த விடமெங்கும் 'அறு' என்பதே நிலைமொழியாகக் கொள்ளப்பட்டது. 'ஆயிரம்' என்ற எண்ணுப்பெயர் வருமொழியாக வரும்போதும் நிலைமொழி 'அறு' என்பதே. அதனால் ஆசிரியர் "அறுஎன்பதன் உகரம் ஈறுமெய்யொழியக் கெடுதல் வேண்டும்" என்று கூறியிருக்கவேண்டும். 'ஆறு' என்பது நிலைமொழிபோல் "ஆறன் மருங்கின்" என்று தொடங்கினர். காரணம் திரிந்ததன் திரிபு அது என்ற நயத்திற்கொண்டதே.

'அறு' என்பது 'ஆறு' என்ற எண்ணுப்பெயரின் திரிந்த வடிவம். அதில் திரிந்தது 'ஆ' என்ற நெட்டெழுத்து. அதன் திரிபாவது 'அ' என்று குறுகியது. அக்குறுக்கமாகிய திரிபைத் தனித்திரிபாகக் கருதாமல் அதன் முன்னைய வடிவாகிய நெடிலாகவே ஆசிரியர் கருதியது அது எனக்கருதலாம். ஆதலின் 'ஆறு' என்பது நிலைமொழிபோல "ஆறன் மருங்கின்" என்ருர். என்ருலும் 'அறு' என்பதே நிலைமொழியாகும். இவ்வாறு கூறியது திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தாற்கூறியதாம்.

இனித் திரிந்ததன் திரிபு பிறிது என்னும் நயம்பற்றிக் காண்போம். அஃதாவது, விகாரப்பட்டதின் விகாரத்தை மூலஎழுத்தாகக்கொள்ளாது வேறெழுத்தாகக் கொள்ளுத

லாம். உதாரணமாக மரக்கோடு என்பதைக் கொள்ளலாம். மரம் என்றசொல் வேற்றுமையில் வருமொழி வல்லெழுத்தோடு புணருமிடத்து இறுதி மகரம் கெட 'மர' எனநிற்கும். 'கோடு' என்பதின் முதல் ககரமெய்யெழுத்தானது 'மர' என்ற திரிந்த சொல்லின் இறுதியை மகர விறுதி யெனக் கருதாமல் அகர விறுதியாகவே கருதித் தான் மிக்கு முடிந்தது. இவ்வுதாரணத்தில் திரிந்த (கெட்ட) எழுத்து மகரம். அம்மகர எழுத்தின் திரிபாவது தான் கெட்டு அகர வீறு என்பதற்கு இடம் கொடுத்தல். பிறிது என்றலாவது அகர விறுதியை முன் எழுத்தாகிய மகரவிறுதி எனக் கருதாமல் தனி எழுத்தாக அஃதாவது அகரவிறுதியாகவே கருதுதல். இவ்வாறு விளக்கம் காண்க. இனி இந்நயத்திற்கு உரையாசிரியர் சுட்டிக்காட்டிய இடம் ஒன்று காண்போம்.

வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே (123)

இதற்கு உரையாசிரியர்,

"சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார வீற்றுச் சொல் முன்னர் வற்றுச்சாரியை தன் வகரமாகிய மெய்கெட அகரம் நிற்றலாகிய பண்பினையுடைய"

எனவுரை யெழுதி, அவையற்றை, இவையற்றை, உவையற்றை முதலியவாக உதாரணமும் காட்டிப் பின்னர்,

"ஆகிய பண்பு என்றதனால் சுட்டு முதலாகிய ஐயேன் இறுதி ஐகாரத்தோடு நில்லாதவழி வற்றின் வகரம் அகரம் நிற்கக் கெடாது வற்றுயே நிற்றல் கோள்க. மற்றிது திரிந்ததன் திரிபு பிறிது என்னும் நயத்தாற் கெடாதே நிற்குமாதலின் இது கூறவேண்டாவேனின், சுட்டு முதல் ஐயீற்றுச் சொல்லின் ஐமுன் என ஓதாது 'சுட்டுமுதல் ஐமுன்' என அச்

சொல் முன்எல்லாம் கெடுவதுபோல ஓதினமையின் வேண்டிற் றென்பது."

எனவும் எழுதினர். "ஆகியபண்பு.........நிற்றல் கொள்க" என்ற கருத்து திரிந்ததன் திரிபு பிறிது என்னும் நயத்தால் பெறப்படுமாற்றைக் காண்போம். அவ்+வற்று+ஐ என்பன 'அவற்றை' எனவரும். திரிந்ததன் திரிபு பிறிதுஎனக்கருதுவது வற்றுச்சாரியையின் முதல் வகரவொற்றின் தொழிலாகக் கொள்வோம். 'அவ்' என்பது அவை யென்பதன் திரிந்த வடிவம். இதில் திரிந்த எழுத்தாவது 'வை' என்பதாம். வையின் திரிபாவது ஐகாரம் கெட்டு வகர ஒற்றாய் நிற்றல். அவ்வகர ஒற்றை அதன் முன்னைய வடிவெழுத்தாகிய 'வை' யென நினையாமல் வகரஒற்றென வேறெழுத்தாகவே நினைத்தல், பிறிது எனக் கருதலாம். அவ்வாறு நினைந்து வற்றுச் சாரியையின் முதல் வகரஒற்று அகரம் நிற்கக் கெடாமல் அப்படியே நின்றது. அதனால் 'அவற்றை' எனவந்தது. இப்படி வருவது திரிந்ததன் திரிபுபிறிது என்னும் நயத்தால் எனக் கொள்ளலாம்.

*சுட்டு முதலாகிய ஐயென் இறுதி ஐகாரத்தோடு நில்லாத வழி வற்றின் வகரம் அகரம் நிற்கக்கெடாது வற்றாயேநிற்கும்' என்பது திரிந்ததன் திரிபுபிறிது என்னும் நயத்தாலேயே பெறவேண்டியிருக்க "ஆகிய பண்பு" என்றதனாற் பெறவைத்தது ஏன் என்ற வினாவிற்கு விடையாக "சுட்டு முதல் ஐயீற்று...வேண்டிற்றென்பது" என்பதைக் கொள்க. "ஆகிய பண்பு.........வேண்டிற்றென்பது" இத்தொடரில் இடையில் வந்த 'மற்றிது' என்பதிலுள்ள 'இது' என்ற சுட்டுக்கு "சுட்டுமுதலாகிய ஐயென் இறுதி ஐகாரத்தோடு நில்லாத வழி வற்றின் வகரம் அகரம் நிற்கக்கெடாது வற்

* இப்பகுதி வேண்டாதது என்றாலும் விளக்கம் வேண்டி எழுதப்பட்டது.

ருயே நிற்கும் 'என்ற கருத்து' என்றும், இது கூறவேண்டா என்பதிலுள்ள 'இது' என்ற சுட்டுக்கு 'ஆகிய பண்பு என்ப தனூற் பெறப்பட்டதாகக் கூறிய கருத்து' என்றும். 'அச் சொல் முன்எல்லாம்' என்பதற்கு 'ஐகெட்டு வந்த 'அவ்' முத லிய சொற்களின் முன் எல்லாம்கூட' என்றும் பொருள் கொள்க.

இனித் திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் என்னும் நயம்பற்றி உரையாசிரியர் யாண்டும் சுட்டினர் இல்லை, ஆதலின் இதன் விளக்கத்தை மட்டும் சங்கத்துச்சுவாமிகள் கூறியதையே வைத்துக் கூறுகின்றோம்.

(1) நினவ கைகள், நின துகை என்பனவற்றில் இதைக் காணலாம். இவைகளின் நிலைமொழிகள் நீ + அ எனவும் நீ + அது எனவும் பிரிக்கப்படும். அ, அது என்பன ஆறும் வேற்றுமையின் பன்மை ஒருமை உருபுகள். 'நீ' என்பது 'நி' எனக்குறுகி, னகர ஒற்று சேர்ந்து 'நின்' என்ருகும். பின் அகரம் சேர்ந்து 'நின' என்ருகும். அவ்வாருயின் நின + அ எனவும் நின + அது எனவும் இவ்விரண்டும் பிரிக்கப்படும். பன்மையுருபாகிய 'அ' என்பது நின என்பதின் ஈற்றெழுத் தின் அகரத்தைப் பொருட்படுத்தாமல் தான் நிலைத்து நின் றது. ஏன்எனின் தான் முன்னின்ற அகரத்தோடு இயைந்து வருவதில்லை என்ருலும், அந்த அகர எழுத்தைத் தனி எழுத் தாகக் கருதாது அதுவருவதற்கு முன்னைய வடிவாகிய (நின் என்பதில்) னகர ஒற்ருகவே கருதியது. மெய்யெழுத்தின் மேல் தான் ஏறி முடியும் இயல்புடைய உயிராதலின் னகர ஒற்றை நோக்கிக் கெடாது நின்றது. இவ்வாறு நிற்பது திரிந்ததன் திரிபு அது என்று கருதிய நயம் என்க. பின்னர் நின என்பதன் இறுதி அகரத்தையும் உருபு அகரத்தையும் உடம்படுத்த வகரமெய் வந்து நினவ என்றமுடிபு ஆகிறது.

நினது என்பது நின அது எனப்பிரிக்கப்பட்டு அது என்பதன் அகரவுயிர் நின என்பதன் இறுதி அகரத்தைத் திரிந்த வேறு தனி எழுத்தாகவே கருதியதால் தனக்கும் அவ் வுயிர்க்கும் மயக்கம் இன்மையின் தானே கெட்டது. (நின+அது–நினது) இது திரிந்ததன் திரிபு பிறிது எனக்கருதிய நயம்.

நின என்பதில் இறுதி னகரம் திரிந்ததாம், அதன் திரி பாவது தான்மெய்யாய் இருந்து அகர உயிர் ஏறப்பெற்ற தாம். அந்த அகரத்தை அகரமாக எண்ணுமல் பழைய னகர ஒற்ருக நினைத்தல் அது என நினைத்தலாம். இவ்வாறு நினைத்தது பன்மையுருபாகிய 'அ'என்பது. இறுதி அகரத் தைத் தனி எழுத்தாகவே—அதாவது னகர ஒற்ருகக் கரு தாது பிறிதோர் எழுத்தாகவே கருதியது 'அது' என்ற ஒரு மையுருபின் அகரம். இது, திரிந்ததன் திரிபு அதுவும் பிறி தும் என்றலுக்கு விளக்கம்.

(2) இனி நினவ நினது என்பனவற்றில் வருமொழி கள் வேறுவேறு காட்டப்பட்டன வாதலின் வருமொழி ஒன் ருகவே உள்ள உதாரணத்தில் இந்நயத்தைக் காண்பாம் 'கலத்துக்குறை' என்பதை உதாரணமாகக் கொள்ளலாம். இது கலம்+குறை எனவும், கலன்+குறை எனவும் பிரிக்கப் படும்.

கலம்+குறை எனப் பிரிக்கப்படும்போது கலம் என்ற சொல், "மகரவிறுதி வேற்றுமையாயின், துவரக்கெட்டு வல் லெழுத்துமிகுமே" என்ற விதிப்படி மகரம் கெட்டுக் 'கல' என நிற்கப் பின் வருமொழி வல்லெழுத்துமிக்குக் 'கலக் குறை' எனவரும். "அத்திடைவரூஉம் கலமென்னளவே'

என்ற விதிப்படி அத்துச் சாரியைவரக் 'கலத்துக்குறை' எனவரும். இதில் வருமொழி வல்லெழுத்தானது, 'கலம் என்பது திரிந்த 'கலத்து' என்ற சொல்லை வேறுபட்ட பிறிதான சொல்லாகக் கருதாமல் பழைய வடிவாகிய 'கலம்' என்ற சொல்லாகவே கருதி மிகுந்தது. இதில் திரிந்தது கலம் என்னும் சொல். அதன் திரிபாவது அத்துப்பேற்றுடன் மகரம் கெட்டுக் 'கலத்து' என்று நின்றது. அது என்றலாவது பிறிதான திரிந்தசொல் எனக்கருதாது பழைய 'கலம்' என்ற சொல்லாகவே கருதியது. அதனால் கலம் + குறை என்பன கலத்துக்குறை எனப் புணருமிடத்து வல்லெழுத்துமிகுதியானது ஈற்றுப் பொதுமுடிபால் வந்ததாதலின் திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தால் வந்ததென்க.

கலன் + குறை எனப் பிரிக்கப்படும்போது இடைவரும் அத்துச்சாரியை காரணமாக நிலைமொழியீற்று னகரம் கெட்டுக் 'கலத்து' எனநின்று பின் வல்லெழுத்து மிக்குக் 'கலத்துக்குறை' என்றாகும். இதற்கு,

அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே

என்பது விதி. இதில் வருமொழி வல்லெழுத்தானது, 'கலத்து' என்ற சொல்லை முன்னைய 'கலன்' என்ற சொல்லாகக் கருதாமல் திரிந்த பிறிதான சொல்லாகவே கருதியதால் அதில் உள்ள சாரியை நோக்கி மிகுந்தது. திரிந்தது கலன் என்றசொல். அதன் திரிபாவது அத்துச்சாரியையுடன் சேர்ந்து னகரம் கெட்டுக் 'கலத்து' என்றானது; பிறிது என்றலாவது கலன் என்ற சொல்லாகக் கருதாமல் திரிந்ததான 'கலத்து' என்ற வேறு சொல்லாகவே கருதியது. எனவே கலன் + குறை என்பன 'கலத்துக்குறை' எனவருமிடத்து வல்

லெழுத்து மிகுதியானது. ஈற்றுப்பொதுமுடிபான் இன்றிச் சாரியை நோக்கிய முடிபால் வந்ததாதலின் திரிந்ததன் திரிபு பிறிது என்னும் நயத்தான் வந்ததென்க.

திரிந்ததன் திரிபு அது எனக் கருதுதலும் திரிந்ததன் திரிபு பிறிது எனக் கருதுதலும் திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் எனக்கருதுதலும் நிலைமொழியிறுதிபற்றி வருமொழியின் முதல் எழுத்தின் தொழில் எனக்கொள்க. இவ்வாறு கொள்வது இருசொற்புணர்ச்சியில் என்றுகொள்க. ஆசிரியர் தொல்காப்பியர் கூற்றுக நூற்பாவில் கொள்ளுமிடங்களில் முதலில் கூறிய கருத்தைப்பற்றிப் பின்னர்க்கூறப்படும் கருத்தின் தொழில் எனக்கொள்க.

உறுதி ஏற்போம்

கி. பழநியப்பன்.

தமிழர் மொழியின் தன்மையும் தொன்மையும்
தமிழர் பெற்ற தாழ்விலாச் சிறப்பும்
உலகோர் யாவரும் உணரச் செய்தது
ஈடில் நற்றமிழ் இலக்கிய மேயாம்.
தமிழர் இலக்கியம் சான்றோர் அறவுரை
வாழ்வின் ஊற்று வாழ்க்கைப் பேரொளி
வஞ்சனை யற்றது வாய்மை நிறைந்தது
ஆய்ந்த பல்லோர் அறிவின் பயனும்.
இத்துணைச் சிறப்பும் இருந்தே பயனென்?
இன்றுநந் தமிழர் இருக்கும் நிலையை
எண்ணின் உள்ளம் இடிந்து மடியும்.
தமிழன் என்பான் தாய்மொழி என்பான்
வணக்கம் என்றிடின் வந்திடும் தொல்லை
என்றே அஞ்சி எவர்க்கும் கூறான்;
சோறெனும் நற்றமிழ்ச் சொல்லிலும் இழிவைக்
காண்பான்; பிறமொழி கலந்து பேசுதல்
கல்வியின் உயர்வைக் காட்டும் என்பான்;
பிறமொழி இலக்கணம் பிழைப்பது குற்றம்
என்பதை ஏற்பவன் ஏனோ தமிழில்
பிழைபட எழுதுதல் பிறப்புரி மையாய்க்
கொள்வது அந்தோ கொடுமை! கொடுமை!!
தமிழா! ஈன்ற தாயைப் போற்றும்
ஆற்றல் இழந்துநல் அறிவையும் இழக்கும்
இந்நிலை உனக்கு வந்த தேனோ?
அயலவர் சேர்க்கை அரசியற் குழப்பம்
சமயப் பூசல் சதித்தொழில் தனித்தனிக்
கெடுத்தது மொழியைக் கொடுத்தது நாட்டை;
தாழ்ந்தோம் வீழ்ந்தோம் தவித்தோம் இன்று
விழித்தோம் எழுந்தோம் வீறு கொண்டோம்.
இடையில் மறந்த இலக்கியம் கற்றிட
முனைந்தோம் இனிநம் முன்னோர் பெற்ற
சிறப்பினைப் பெறுவோம் சீருடன் வாழ்வோம்
தனக்கென வாழ்தலில் தமிழ்க்கென வாழ்தல்
இன்பமும் புகழும் இனிதே கொடுக்கும்
என்பதை யுணர்ந்தே என்றும் வாழ்வோம்
என்றே உறுதி ஏற்போம் இன்றே.

வினையெச்சங்களில் காலம்

[மா. இளையபெருமாள். எம். ஏ: எம். லிட்]

வினைச்சொற்கள் 'காலமொடு தோன்றும்' என்றும் 'இறப்பின், நிகழ்வின், எதிர்வின் என்றா அம்முக்காலமும் கொள்ளும்' என்றும் கூறிய தொல்காப்பியர், அக்காலங்களைக்குறிக்கும் இடைநிலைகளைப் பிரித்துத்தரவில்லை. அதற்குக் காரணமாகச் சேனாவரையர் "முன் ஈறுபற்றி உணர்த்தப்படும் வினைச்சொற்களை இஃது இறந்த காலத்திற்குரித்து, இது நிகழ்காலத்திற்குரித்து, இஃது எதிர்காலத்திற்குரித்து என வழக்குநோக்கி உணர்ந்து கொள்க என்பது விளக்கிய காலமொடு வரூஉம் என்றார்" என்று குறிப்பிடுகிறார். நச்சினார்க்கினியர் வேறொரு காரணத்தைக் காட்டுகிறார். "இம்முக்காலத்தும் வருதற்கு உரிய காலங்காட்டும் எழுத்துக்களை ஆசிரியர் எடுத்து ஓதாராயினார். பின்னுள்ளோர் காலங்கட்கு உரியவாக எடுத்து ஓதிய எழுத்துக்கள் தம்முள் மயங்கியும் வருதலின்" என்று குறிப்பிடுகிறார். என்றாலும் காலங்காட்டும் எழுத்துக்களைப்பிரித்துக்காட்டும் முயற்சியை அவர் ஆதரிக்கிறார். "ஆசிரியர் அங்ஙனம் மயங்குதல்பற்றி எடுத்து ஓதாமையின் உரையாசிரியரும் அவ்வெழுத்துக்களைச் சிறிதே காட்டினார்." என்று உரையாசிரியர் முயற்சியை எடுத்துக்காட்டி "இனிப்பின்னுள்ளோர் கூறினார் என்பது பற்றியும் மாணாக்கர்க்கு உய்த்து உணரும் உணர்வு இன்று என்பது பற்றியும் யாமும் இவ்வெழுத்துக்களைப் பிரித்துக் காட்டுதும்" என்று தமது முயற்சிக்குக் காரணம் காட்டுகிறார். சேனாவரையரும் அவர் கருத்துப்படி 'ஈற்றுமிசை நிற்கும் எழுத்து வேறுபாட்டைமுற்றவுணர்த்தலாகாவாயினும் சிறிய சொல்லுதும்' என்று தொடங்கி இம்முயற்சியைச் செய்யாமலில்லை. இளம்பூரணர், தெய்வச்சிலையார், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய நால்வரும்

'செய்து' முதலிய ஒன்பது வாய்பாட்டு வினையெச்சங்களின் காலம் குறித்துக் கூறும் கருத்து வேறுபாடுகள் இங்கு ஆராய்தற்குரியன.

வினையெச்சங்கள் காலங் காட்டுகின்றனவா? எந்த வாய்பாட்டு வினையெச்சம் எந்தக்காலத்தை யுணர்த்துகிறது? என்பவைகளைப் பற்றி இளம்பூரணர் ஆராயவில்லை. அவரைப்பொறுத்தவரையில் "செய்தென் எச்சத்து இறந்த காலம்" என்ற தொல்காப்பியர் கருத்தைமட்டும் ஒப்புக்கொண்டு உரையெழுதுகிறார்: செய்து என்பது இறந்த காலம் காட்டும் வினையெச்சம் என்ற தொல்காப்பியர் கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஏனைய உரையாசிரியர்கள் மூவரும் ஏனைய வினையெச்சவாய்பாடுகளின் காலம் குறித்து ஆராய்கின்றனர்.

வினையெச்சங்கள் உணர்த்தும் காலங்களைப் பற்றி இவ்வுரையாசிரியர்கள் தரும் செய்திகளில் முக்கியமானது, செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் முக்காலங்களையும் உணர்த்தும் எனக் கூறுவதாகும். மழை பெய்யப் புகழ் பெற்றது, மழை பெய்யக் குளம் நிறைந்தது என்பவற்றை இறந்தகாலத்திற்கும், வாழச்செய்த நல்வினை, ஞாயிறு பட வந்தான் என்பவற்றை நிகழ்காலத்திற்கும், மழை பெய்ய எழுந்தது, உண்ண வந்தான் என்பவற்றை எதிர்காலத்திற்கும் சான்றாகத் தெய்வச்சிலையார் காட்டுகின்றார். சேனாவரையர், 'அக்ரம், மழை பெய்யக் குளம் நிறைந்தது, ஞாயிறு பட வந்தான், உண்ண வந்தான் என மூன்று காலமும் பற்றி வரும்' என்று உதாரணம் தருகின்றார். நச்சினார்க்கினியரும் ஏறக்குறைய இந்தச் சான்றுகளையே காட்டுகின்றார். தொல்காப்பியர் சாதாரணமாகக் காலமயக்கம் கூறுவது போல ஒரு குறிப்பிட்ட காலத்தை உணர்த்தும் இவ்வினையெச்சம் வேறு காலங்களில் மயங்கியும் வரும் என்று கூட உரையாசிரியர்கள் கூறவில்லை, இவ்வினையெச்

சம் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தை உணர்த்துவது போல இன்னொரு மேற்கோளில் சந்தர்ப்பத்திற்கேற்ப வேறு காலத்தை உணர்த்தி இவ்வாறு முக்காலத்தையும் அஃது உணர்த்துகிறதுஎன்பதைஅவர்கள் கருத்தாகக் கொள்ளவேண்டும். அவ்வாருயின் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் காலத்தைக் குறிப்பால் உணர்த்தும் குறிப்புவினையாகிவிட்டதா? இல்லையாயின் காலம் காட்டும் இடைநிலை அதில் இருக்கிறதா? இருக்கிறதாயின் அஃது எது? என்பன போன்ற வினுக்களுக்கு அவர்களுரையில் விடை யாதும் இல்லை.

உரையாசிரியர்கள் கருத்துக்களின் இரண்டாவது முக்கியமான செய்தி, ஒரு குறிப்பிட்ட வாய்பாட்டு வினையெச்சம் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறிக்கும் என்று ஓர் உரையாசிரியர் கருதும்போது, அதையே வேறு காலங்களையும் குறிப்பதாக வேறு உரையாசிரியர்கள் எண்ணுவதாகும். எதிர்காலத்தில் மயங்கிவரும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்ட இறந்த காலச் செய்தென்னெச்சத்தைச் சிறுபான்மை நிகழ்காலத்தையும் குறிக்கும் என்று நச்சினர்க்கினியர் 'ஓடா நின்று' 'போயினுன்' 'பருகிப்பகல்கான்றெழுதரு' 'கரும்பீன்று பொதுளிய' ஆகிய சான்றுகளைக் காட்டுகிருர். இவ்வாறே, சேனுவரையரும் நச்சினர்க்கினியரும் இறந்தகாலத்தை உணர்த்துவதாகக் கருதும் செய்யூ என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்தை இறப்பு, நிகழ்வு என்னும் இரண்டு காலத்தையும் உணர்த்துவதாகத் தெய்வச்சிலையார் குறிப்பிடுகிருர். அதிலும் நச்சினர்க்கினியர் இறந்த காலத்திற்குக் காட்டுகின்ற 'நிலம் புடையூஉ எழுதரும் வலம்படு குஞ்சரம்' என்ற சான்றையே நிகழ்காலங் காட்டுதற்குச் சான்ருகத் தெய்வச்சிலையார் குறிப்பிடுகிருர். இன்னும் நிகழ்காலத்தை உணர்த்தும் என்று சேனுவரையர் குறிப்பிடும் செய்பு என்

னும் வாய்பாட்டு வினையெச்சம், நச்சினார்க்கினியர்க்கு இறப்பையும் நிகழ்வையும் உணர்த்த, தெய்வச்சிலையாருக்கு இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலத்தையும் உணர்த்துகிறது.

மூன்ருவது முக்கியசெய்தி, மூன்று உரையாசிரியர்களும் கருத்தொருமைப்படும் வினையெச்சத்தில்கூடக் கால எழுத்தைப் பிரித்துத் தராமையாகும். செய்பு என்பது நிகழ் காலம் குறிப்பதில் மூவர்க்கும் கருத்தொற்றுமை யுண்டு. செய்தென என்பது இறந்த காலத்தையும் செயியர், செய்யிய, செயின் ஆகியன எதிர்காலத்தையும் உணர்த்துகின்றன என்று மூவரும் ஒருமுகமாகக் கூறுகின்றனர். ஆனல் இங்கெல்லாம் கால இடைநிலைகளைப் பிரித்துக்காட்டாதது ஒரு பெருங்குறையாகும். தொல்காப்பியர் பிரித்துக் காட்டாததற்குக்காரணம் கூறிய உரையாசிரியர்கள், தாங்கள் செய்யாததன் காரணத்தைக் கூடத் தெரிவிக்கவில்லை.

இனி நூதன இலக்கண ஆசிரியர்கள் மேற்கொள்ளும் விஞ்ஞான முறையைப் பின்பற்றி இவைகளைப் பகுத்துப் பார்ப்போம். செய்+த்+உ எனச் செய்தென்னெச்சத்தைப் பிரித்து அவைகளை முறையே வினையடி + கால எழுத்து+வினையெச்ச விகுதி எனக் கொள்வதா? கொண்டால் நச்சினார்க்கினியர்க்குச் செய்து எதிர்காலம் உணர்த்துவதைக் காலமயக்கம் எனக்கொள்வதா? உகரம் வினையெச்ச விகுதி என்பதற்குச் செய்பு என்பதைத் தவிர ஏனைய வினையெச்சவாய்பாடுகளில் ஆதாரம் உளதா? செய்பு என்பதனையும் செய்+ப்+உ எனப் பிரித்துப் பகர ஒற்றை எதிர்கால இடைநிலை என்று ஏனைய வினைகளில் போலக் கொள்வதா? அல்லது உரையாசிரியர்கள் கருத்துப்படி நிகழ் கால எழுத்தாகக்கொள்வதா? அல்லது கால மயக்கம் எனக் கூறுவதா? அல்லது செய்யா என்னும் பெயரெச்ச எதிர்மறை வினையை

டாக்டர் வி. ஐ சுப்பிரமணியம் அவர்கள் செய்+அ+அ எனப்பிரித்தது போல (தமிழ்க்கல்ச்சர் தொகுதி VIII, நம்பர் 1. ஜனவரி–மார்ச்,, 1959) செய்யூ என்னும் வினையெச்சத்தையும் செய்+உ+உ எனப் பிரிக்கவா?

செயவெனெச்சத்தைச் செய்+0+அ என்றோ செய்+அ+0 என்றோ வசதிக்கேற்றவாறு வைத்துக்கொண்டு சூனியத்தைத் துணைக் கொள்வதா? நச்சினார்க்கினியர் கருத்துப் படிச் 'செய்து' என்னும் வாசகத்தைத் தந்தே நிற்கும் எஞ்சி, போய் ஆகிய வினையெச்சங்களையும் அவ்வாறே எஞ்சு+இ+0 அல்லது எஞ்சு+0+இ என்றோ; போ+ய்+0 அல்லது போ+0+ய் என்றோ பகுத்துக்கொள்வதா? அல்லது செய என்னும் வினையெச்சத்தின் ஈற்று அகரத்தை இரண்டு அரைமாத்திரையுள்ள குற்றியல் அகரங்களாகப் பிரித்துச் செய்+அ்+அ் என ஏன்தான் கொள்ளக் கூடாது? இவ்வாறே செய்யியர், செய்யிய, செயின் என்னும் வினையெச்சங்களில் எதனை எதிர்கால எழுத்தாகக் கொள்வது? மூன்றிலும் வருகின்ற இகரத்தையா? அடுத்து வருகின்ற அகரம், ரகர ஒற்று, னகர ஒற்று இவைகளில் ஒன்றையா?

இவை போன்ற வினாக்களெல்லாம் ஒரு தனிக் கட்டுரையில் விடை காணற்குரியன.

மாணவர் கேட்பர் மகிழ்ந்து*

1. கல்லூரி யெங்குங் கலையென்னு மத்துணையு
மொல்லுந் தமிழா லுரைக்கவென—வல்லுநர்கள்
காணக் கனிவோடு கற்பிக்குங் காலேயம்
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

து. பொன்னுசாமி
முடிவுநிலை 2-ஆம் யாண்டு

2. நூற்பல வாய்ந்து நுவலுந் திறத்துடனே
ஏற்பன பன்னூல் எடுத்தோதித்—தோற்றமுடன்
காணவும் நன்குய்க் கருத்தோ டுரைக்கிற்பின்
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

கா. தெய்வேந்திரன்
முடிவுநிலை 2-ஆம் யாண்டு

3. சொல்லிற் செயலின்கண் தூய்மை யுடையராய்ச்
சொல்லிற் செலச்சொல்லுந் தோன்றலாய்ச்—
சொல்லினுற்
பேணுநர்ப் பட்டுப் பிறிதாறு செல்லாரேல்
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

நீ. சீ. சுந்தரராமன்
முடிவுநிலை 2-ஆம் யாண்டு

4. கன்னித் தமிழ்மொழியால் கட்சிமனம் இல்லாது
தென்னகத்தார் எல்லோரும் சேர்ந்துமே—
மன்னுபுகழ்ப்
பூணவரும் பாங்கனைத்தும் பொற்புடனே கூறிடிலோ
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

சா. ஆதினமிளகி
முடிவுநிலை 2-ஆம் யாண்டு.

* இவ்வடியை ஈற்றில் வைத்து எழுதப்பட்ட வெண்பாக்கள்.

5. தேனெழுகும் பாவதனுல் தேயமெலாஞ் செந்தமிழின்
மானவுரை கேட்டு மகிழ்வுறவே—நானுரைப்பேன்
பூண வுளமினிக்கும் பொங்கு மிசைத்தமிழை
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

பெ. இராமசாமி
முடிவுநிலை முதலாண்டு

6. ஐம்பெருங் காப்பியமும் ஆன்றதொல் காப்பியமும்
பைம்பொன் தமிழ்நூற் பலவுரையும்—உம்பருமே
நாணச்செய் நல்லோர் நயனுரையும் நந்தமிழ்
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

மீ. பழனியம்மாள்
முடிவுநிலை முதலாண்டு,

7. கானகத் தேன்சுவையும் கன்னலது தீஞ்சுவையும்
தானகங் கொண்ட தனித்தமிழை—தேனினிய
மாணலத்தோர் போற்றிவரும் மாமதுரைச் சங்கத்து
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

மா. சீதாஇலக்குமி
முடிவுநிலை முதலாண்டு

8. ஓங்கலிடை வந்தே உலகிருள் போயகலப்
பாங்குடன் நின்ருெளிரும் பான்மையே—நீங்காத
மாண்புடைய வள்ளுவனுர் மன்னுபுகழ்ச் செந்தமிழை
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

சே. சரோஜா
முதனிலை 2-ஆம் யாண்டு

9. ஆய்ந்த அறிவினுல் ஆர்ந்த சுவைபெறவே
மேய்ந்து தரும்பாலே மேன்மையாய்த்—தாய்ப்பசுவைக்
காணவரும் கன்றினைப்போல் கம்பனது காவியத்தை
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

சி. பழனியப்பன்
முதனிலை 2-ஆம் யாண்டு

10. பண்டுமுதல் இன்றுவரை பாரினிலே வீரத்தின்
பண்பை விளக்கிவரும் பாட்டினையே-பண்ணோடு
பாணயத்தில் பாடிடவே பத்தி யுளங்கொண்டே
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

சு. சுப்பையா
முதனிலை 2-ஆம் யாண்டு,

11. திருக்குறளாம் நன்னூலைத் தேடிக்கற் காமல்
இருப்பதனால் என்னபயன் என்பேன்-விருப்பாட்சி
காணவருங் காலமது கையுளதே நந்தமிழை
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

வி. நரசிம்மன்
முதனிலை 2-ஆம் யாண்டு,

12. வள்ளுவனார் வாயுதிர்த்த வான்புகழும் மேவியசீர்த்
தெள்ளுதமிழ் முப்பாலைத் தெள்ளறிவோர்—பள்ளியிலே
பாணயத்தில் பாடுகின்ற பாங்கினால் பண்புடனே
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

கா. சுந்தரம்
முதனிலை 2-ஆம் யாண்டு,

13. வீழ்ச்சியுற்ற நாடு விழித்தெழவே யென்றென்றும்
தாழ்ச்சியுற்ற மக்கள் தரமுயர—வாழ்க்கையில்
நாணகற்றும் சான்றோர் நவின்றுவரும் பொன்னுரையை
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

அ. கி. அழகர்சாமி
முதனிலை 2-ஆம் யாண்டு.

14. அறிவியல் வாழ்வினில் ஆக்கம் அளிக்கும்
பொறியியல் நுட்பமிகப் போற்றி—அறிந்தாய்ந்தோர்
மாண்புகழ்க் கல்வியை மாத்தமிழிற் கற்பித்தால்
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

பொ. செ. செண்பகம்
முதனிலை 2-ஆம் யாண்டு.

15. சங்கம் வளர்த்த தமிழாய்ப்; பழங்கால
மங்காப் புகழ்சேரும் மாமொழியாய்ப்;—பங்கமிலாப்
பாணரெலாம் பாடிப் பரிசுபெற்ற பைந்தமிழை
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

மு. முனியாண்டி
முதனிலை 2-ஆம் யாண்டு.

16. தண்டமிழின் பாவனைத்தும் தாரணியோர் போற்றிடவே
கண்டுடனே கற்றுக் கனிந்திடவே – பண்டிசைத்த
பாணர்செவ் வாய்ப்பிறந்த பைந்தமிழின் இன்னிசையை
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

ம. மு. இராமகிருஷ்ணன்
முதனிலை முதலாண்டு.

17. அன்றொருநாள் ஆற்றலுடன் ஆண்டிட்ட தென்னகத்தார்
இன்றிந்த இந்தியரின் வஞ்சத்தால் – துன்புறவே
நாணுற்று வாழ்கின்ற நாள்போக்கி மீண்டிடவே
மாணவர் கேட்பர் மகிழ்ந்து.

சி. குப்புசாமி
முதனிலை முதலாண்டு.

பறவையே பாராயோ ?

[நாவரசன்]

இராகம்—தன்யாசி தாளம்—ஆதி

முதல் பறவையே பாராயோ ?—இந்தப்
பார்தனில் வாழ்ந்திடும் பண்பிலார் செயலினை (பற)

இடை உறவுடன் வாழ்ந்திடின் உலகையே ஆளலாம்
சிறகிலா நிலைதனில் வாழவும் கூடுமோ? (பற)

இறுதி வானில் பறப்பாய் வையத்தில் தவழ்வாய்
கானில் திரிவாய் கட்டின்றி வாழ்வாய்
ஏனென்று தடுப்போர் உன்வாழ்விலுண்டோ?
நானில மெங்கும் நயவஞ்சச் செயலினை (பற)

மதிப்புரை

நூலின் பெயர்: *நேபாளமும் கேதாரமும்*
வெளியிட்டோர்: *திருவாவடுதுறை ஆதீனம்.*

திருவாவடுதுறையாதீனத்தடிகள் நேபாளம், கேதாரம் ஆகியவற்றைக் கண்டுவந்த செய்தியை இந்நூல் விளக்கு கின்றது. அடிகள் கண்டுமகிழ்ந்த நேபாளநாட்டின் கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பையும், நகர அமைப்பையும், அவண் நிலைபெற்றுள்ள பழக்கவழக்கங்களை யும்தெளிவாக இந்நூல் விளக்குகின்றது. சைவ சமயகுரவர் களான திருஞானசம்பந்தரும், சுந்தரரும் கேதாரத்தைப் பாடியுள்ள பதிகங்களையும் இந்நூலில் இணைக்கப்பட்டுள் ளது. பயணத்திற்கு இன்றியாத அமைப்புக்களுடன் விளங் கும் இந்நூல் அழகிய ஒளிப்படங்களையும்பெற்றுத்திகழ்கின் றது. இந்நூலைப்படித்தவர்கள் தாமும் அத்தலங்களை நேரிற் கண்டு மகிழ்ந்த மனநிறைவை யடைவர் என்பதுறுதி.

நூலின் பெயர்: *குன்றக்குடி திருக்கைலாயபரம்பரை திருவண்ணாமலை ஆதீன வரலாறு.*

ஆசிரியர்: வித்துவான். சு. சுவர்ணகாளீச்சுவரன்.
வெளியிட்டோர்: **ஆதீனச்சீடர்கள் சங்கம்**

தமிழகத்துச் சைவ ஆதீனங்கள் பதினெட்டனுள் ஒன்றாகிய திருவண்ணாமலை ஆதீனத்தின் வரலாற்றைச் சுருக்கமாக விளக்குவது இந்நூல். இவ்வாதீனம் மேற் கொண்டுள்ள திருப்பணிகள் பலவற்றையும் இந்நூல் அறி விக்கின்றது. பெரியபுராணத்திற்கு முதன்முதல் பதவுரை எழுதியவரும் இவ்வாதீனத்தைச் சேர்ந்தவரும் ஆகிய ஆறுமுகத்தம்பிரான் முதலிய புலவர்கள் தொண்டுகளையும், இன்று இதன் தலைவராக விளங்கும் அடிகளாரது நற்பண்பு களையும் சிறப்புற விளக்குகின்றது.

பொறுப்பாசிரியர்

"காலத்தை வென்ற கன்னி"

வித்துவான் இல. வாசுகிநாதன்
தமிழாசிரியர். இராமநாதபுரம்.

(1) பொற்புறப் பொதியந் தன்னில்
புகழ்மிகப் பிறந்தாய்; சங்கம்
நற்பயன் உணர்ந்து காக்க
நலமுற வளர்ந்தாய் பின்பு
கற்பவர் உள்ள மெல்லாம்
கரும்பென இனிக்கச் செய்தாய்;
கற்பவர்க் கருளும் இன்பக்
கன்னியே! தமிழே! வாழி!

(2) தென்னவர் மடியில் தங்கித்
திகழ்ந்தனை! தெவிட்டா வண்ணம்
பன்னலம் கனியப் பாலால்
பாவலர் உன்னை நாளும்
நன்னய வடிவம் நல்கி
நலஞ்செய நீயோ மெள்ள
அன்னமாய் நடந்தாய் என்றும்
அழகியே! தமிழே! வாழி!

(3) வளர்ந்திடும் குழந்தை யாகி
வனப்புற மழலைச் சொல்லால்
உளங்கவர் இசைக்கு மேலாம்
உவகையைத் தந்தாய் சேரர்
இளங்கவி வாணர் தந்த
எழில்பெறும் சிலம்பும் பூண்டு
தளர்நடை நடந்தாய் எங்கள்
தண்டமிழ் அமுதே! வாழி!

(4) வள்ளுவர் ஊற்றித் தந்த
வளந்தரும் முப்பால் என்னும்
தெள்ளிய அமுதும் உண்டு
தெளிந்தனை உலகம் வாழ
கள்ளவிழ் மலர்கள் சூடி
கவினுறும் கன்னி யாகி
புள்ளிமான் பார்வை பெற்றுப்
பொலிந்திடும் தமிழே! வாழி!

(5) தொன்மையில் உனக்கும் ஈடு
சொல்லவும் மொழியு மில்லை!
மென்மையில்; அழகில்; இன்பம்
மிகுத்திடும் இலக்கி யத்தில்
வன்மையில் சிறந்து தோன்றி
வளர்ந்திடும் மொழியாய் வேறும்
இன்மையின் இணையு மின்றி
எழில்பெறும் தமிழே வாழி!

(6) கன்னியும் ஒருநாள் உள்ளம்
கவர்ந்திடும் இளைஞன் தன்னை
இன்னுயிர்த் துணைவன் ஆக்கி
இன்பமும் எய்திக் காதல்
சின்னமாய்த் திகழும் மக்கள்
செல்வமும் பெறுவாள்! நீயோ
பன்மொழிக் குழந்தை பெற்றும்
பாரினில் கன்னி ஆனாய்!

(7) காலையம் பொழுது தோன்றிக்
கடும்பகற் பொழுதாய்; இன்ப
மாலையாய்; உள்ள மெல்லாம்
மகிழ்ந்திடும் இரவாய்த் தோன்றி
ஞாலத்தின் பருவ மெல்லாம்
நாளுமே மாறும் நீயோ
காலத்தை வென்று நின்றாய்!
கன்னியே! தமிழே! வாழி!

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனாநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	8	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினா விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A.. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.